தலைவர் / நிர்வாக அலுவலர், 89–பெருமாள்பட்டு ஊராட்சி, திருவள்ளூர் ஊரர்ட்சி ஒன்றியம்
அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை – திரு. ஞ. சீனிவாசன்,
செ.மு.ந.க. எண். 003 / 2024 / ஊ நாள். 26 .07.2024.

பொருள் – ஊராட்சி நிர்வாகம் கட்டிட மனைப்பிரிவு அனுமதி – திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் – பெருமாள்பட்டு ஊராட்சி – திருவூர் B கோயில்குப்பம் கிராம சர்வே எண். 355/4 –ல் 1850 சதுர மீட்டர் (0.45 ஏக்கர்) பரப்பில் உள்ள மொத்தம் 09 மனைபிரிவுகளுக்கு – அனுமதி அளித்து உத்திரவிடல் – சார்ந்து.

பார்வை – 1. உதவி இயக்குநர், நகர ஊரமைப்பு, திருவள்ளூர் மண்டலம் எண். 43 / 397A, இரண்டாம் தளம், அன்னை இந்திரா காந்தி சாலை, இராஜாஜிபுரம் பகுதி II, திருவள்ளூர் – 602 001 அவர்களின் ந.க. எண். R356AB45 / 2024 / TCP நாள். 18.06.2024.
2. தானபத்திர ஆவண எண். 2159/2024
3. ஊராட்சி மன்ற தீர்மாண எண். 986 நாள். 28.06.2024

x x x

உத்திரவு –

பார்வை 1ல் காணும் கடிதத்தின்படி திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், பெருமாள்பட்டு ஊராட்சியில் பெருமாள்பட்டு ஊராட்சி – திருவூர் B கோயில்குப்பம் கிராம சர்வே எண். 355/4 –ல் 1850 சதுர மீட்டர் (0.45 ஏக்கர்) பரப்பில் உள்ள மொத்தம் 09 மனைபிரிவுகளுக்கு மனைப்பிரிவுகளாக அமைக்க நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவள்ளூர் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களின் ந.க. எண். R356AB45 / 2024 / TCP நாள். 18.06.2024 மூலம் தொழில் நுட்ப ஒப்புதல் உள்ள மனைகளுக்கு உரிய தொகை அரசு மற்றும் உள்ளாட்சி நிதிக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதால் மொத்தம் 09 மனைகளுக்கு ஒப்புதல் அளித்து பின்வரும் நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து உத்திரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. 1994 ஊராட்சிகளின் சட்டம் மனைபிரிவு மற்றும் துணை விதிகளுக்கு உட்பட்டது.
2. மனைபிரிவு வரைப்படத்தில் உள்ளவாறு துணைபிரிவு செய்ய வேண்டும். உள்கட்டமைப்பு மற்றும் வெளிகட்டமைப்பு ஏதும் மாற்றம் செய்யக்கூடாது.
3. மனைபிரிவு வரைபடத்தில் உள்ளவாறு மனைபிரிவுகள் மற்றும் உட்பிரிவுகள் அமைப்பு இருக்க வேண்டும்.
4. இவ்வாணையினை திருத்தம் செய்யவோ அல்லது நீக்கம் செய்யவோ தலைவர் / நிர்வாக அலுவலர் அவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.
5. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கிகரிக்கப்பட்டு SWP / DTCP / TVLR / Layout No. 140 / 2024 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக்கற்கள் வரையருக்கப்பட வேண்டும். மனிபிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைகற்கள் கொண்டு மனுதாரர் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும்.
6. தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகியவசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தரவேண்டும்.
7. இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (ளுயீடயல) அமைக்கப்பட வேண்டும்.
8. மனைபிரிவில் பள்ளமாக உள்ள பகுதியிணை தெருமட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
9. மனைபிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெறப்பட வேண்டும்.
10. தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி ஒ 4 அடி என்ற அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

11. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைபிரிவு வரைபடம் நகல் வழங்கப்பட வேண்டும்.

12. மனைபிரிவு மனைகள் வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீதுள்ள உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

13. மனைபிரிவு இடம் 1984–ம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டபிரிவு 4(1)ன்படி நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நில சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகள் ஏதேனும் மீறப்பட்டிருந்தால் மனைபிரிவு அனுமதி இரத்து செய்யப்படும்.

14. மனைபிரிவு விதிமுறைகளின்படி கட்டணத்தொகை குறைவாக செலுத்துப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டால் பிற்காலத்தில் அத்தொகையினை மனுதாரரால் செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

மேற்படி நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அனுமதி கடிதத்தின்படி தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள மொத்தம் 09 மனைகளுக்கு அனுமதி அளித்து இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.

21/7/2017

தலைவர் / நிர்வாக அலுவலர்,
89–பெருமாள்பட்டு ஊராட்சி,
திருவள்ளூர் ஊரர்ட்சி ஒன்றியம்

பெறுநர்
திரு. C.J. மது
எண். 41, S&P. Residency,
ராஜன்குப்பம்,
திருவள்ளூர் – 600095